## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 127 / 2022**

**வா.சா.1 ஆனந்தவள்ளி 05.11.2024**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பேின் என்பதை மற்நது விட்டேன். நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கறிஞர் அறிவிப்பை ஆவணமாக தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனது வழக்கறிஞருக்கு நான் தான் கூறினேன்.

2. தாவா சொத்தின் சர்வே நம்பர் மறந்து விட்டேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் ஆகும். தாவா சொத்தின் அருகே லிங்கம் என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது. நானும் மேற்படி லிங்கமும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர் எனது உறவினர். தாவா சொத்து அழகருக்கு எப்படி பாத்தியம் என்றால் அவர் தீத்தான்பேட்டை கிராமத்தை சேர்ந்த ஒருவரிடம் கிரையம் வாங்கியுள்ளார். அழகர் எந்த வருடம் தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 1ல் எனக்கு பாத்தியமானதும் என் அனுபவத்தில் உள்ள அடியிற்கண்ட சொத்தை தங்களுக்கு சிவகங்கை ஆர்.டி.ஓ எல்.ஓ நம்பர் 5/76.16.11.76 ன் படி சிலோன் அகதிகள் முகாம் நிவாரண திட்டத்தின் கீழ் ஜி.ஓ.271/22.1.70 படியும் நிலம் வாங்குவதற்கு சாங்சன் செய்யப்பட்டுள்ள ரூபாய் 5400 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு.

**4.** அரசு கடன் பெற்று வாங்கிய சொத்தை நான் கிரையம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜி.ஓ.271/22.1.70 ன் படி இந்த சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முடியாது என்றால் சரியல்ல. சொத்தை அழகர் கிரையம் வாங்கிய பின்பு கடந்த 13.12.1976 அன்று ஆவண எண் 1685/1976 ன் கீழ் அரசு இந்தியா என்ற பெயரில் சொத்து அரசிடம் அடமானம் உள்ளது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை மேற்படி அடமானம் நீக்கப்படாமல் வில்லங்க சான்றிதழில் உள்ளது என்றால் சரியல்ல.

**5.** தாவா சொத்து நான் கிரையம் வாங்கும் வரை அழகரின் அனுபவத்தில் தான் இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் சான்றிட்ட நகல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நடேசனும் லிங்கமும் தாவா சொத்தின் அருகில் சொத்து வாங்கிய விபரம் எனக்கு லிங்கம் சொல்லி தெரியும். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. லிங்கம் 1 1/2 ஏக்கர் கிரையம் வாங்கியதாக என்னிடம் கூறினார்.

**6.** என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 வரி ரசீதுகளில் ஆனந்தவள்ளி என்று எனது பெயர் குறிப்படப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 வரி ரசீதுகள் எந்த ஆண்டுகளுக்குரியது என்று தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சாியல்ல. தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**7.** வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த அதிகாரி வழங்கினார் என்று அந்த அலுவலகத்தின் முத்திரை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லிங்கம் எவ்வளவு ரூபாய்க்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. நடேசன் வாரிசுகளிடமிருந்து லிங்கம் கடந்த 04.06.1992 ல் ஆவண

எண் 686/1992 ல் 3 ஏக்கர் நிலத்தை ரூ.15600/—க்கு கிரையம் வாங்கியுள்ளார் அந்த விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 3 ஏக்கர் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரூ.9600/— என குறிப்பிடப்பட்டுள்ளது.

**8.** 1992 லேயே 3 ஏக்கர் நிலத்தை லிங்கம் ரூ.15600/—க்கு கிரையம் வாங்கியுள்ளதிலிருந்து வா.சா.ஆ.3 ஆவணம் போலியான ஆவணம் என தெரிய வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை எங்கு வைத்து யார் எழுதினார்கள் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எனது நிரூபண வாக்கு மூலத்தில் வாசாஆ.3 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று சொல்லவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தின் உண்மை தன்மையை முத்திரை தாள் விற்பனையாளர் மூலமாகவும் அரசு கருவூலம் மூலமாகவும் இந்த நீதிமன்றத்தில் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

**9**. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் அழகருடைய கையொப்பம் இல்லை நான் அந்த ஆவணத்தை போலியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள அழகரின் கையொப்பத்தை நிரூபிக்க தயாராக உள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணத்தில் எதற்காக அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அழகருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து தான்.

**10.** அழகருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தில் அழகரின் வாரிசுகள் கையொப்பம் போடவேண்டிய அவசியம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக அழகர் வாரிசுகளை அழைத்து வந்து பத்திரம் பதிவு செய்து தருவதாக கூறியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்

சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் சுவாதீனம் எடுக்கவில்லை என்றும் தாவா சொத்து இன்று வரை 1, 2 பிரதிவாதிகளின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. பத்திரம் பதிவு செய்து கொடுக்க அழகரிடம் எப்போது கேட்டேன் என்று தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை, பலமுறை கேட்டேன். நான் எந்த காலத்திலும் அழகரிடமோ, அழகர் வாரிசுகளிடமோ பத்திரம் பதிவு செய்து தர கேட்கவில்லை என்றால் சரியல்ல.

வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை